

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரியில் உள்ள 16 கால் மண்டபத்தில் ரூ. 5 இலட்சம் செலவில் நடைபெற்று வரும் சீரமைப்புப்பணிகளை இன்று (31.07.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 486/2016 நாள்: 31.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், தோவாளை மற்றும் கன்னியாகுமரியில் நடைபெற்று வரும் கட்டிட மற்றும் சீரமைப்பு பணிகளை இன்று (31.07.2016) நேரில் சென்று பார்வைிட்டு, ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், தோவாளை ஊராட்சி ஒன்றியம், தோவாளையில், வேளாண் விற்பனை மற்றும் வணிகதுறையின் மூலம், 0.37 ஹெக்டர் பரப்பளவில் ரூ. 3 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் மலர் வணிக வளாகம் கட்டிட பணிகளை இன்று (31.07.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, வணிக வளாகத்தில் அமையவுள்ள கடைகளின் விவரங்களை வேளாண்மை துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அப்போது 75 கடைகள் வளாகத்தில் கட்டப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. இக்கட்டுமான பணிகளை விரைவில் முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து தோவாளையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நேரில் சென்று, உள் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறை, இரத்த வங்கி, ஸ்கேன் பிரிவு, பிரசவ பிரிவு ஆகியவற்றை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

கன்னியாகுமரி, முக்கடல் சங்கமத்தில் (சங்கிலி துறை) உள்ள 16 கால் மண்டபத்தில், குமரி மாவட்ட திருக்கோவில் நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் செலவில் நடைபெற்று வரும் சீரமைக்கும் பணிகளையும், பக்தர்கள் ஆடி அமாவாசையையொட்டி புனித நீராடும் இடத்தினை சுத்தமாக வைத்துக்கொள்வதோடு, பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தந்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து, மாவட்ட திருக்கோவில் நிதியிலிருந்து ரூ. 55 இலட்சம் செலவில் கன்னியாகுமரி விவேகானந்தபுரத்தில் உள்ள சக்கர தீர்த்த விஸ்வநாதர் குளத்தில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், இணை ஆணையர் (திருக்கோவில்கள்) திருமதி. பாரதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு. தாணுப்பிள்ளை, பராமத்து பொறியாளர் திரு. இராஜ்குமார், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி தலைவர் திரு. சந்தையடி பாலகிருஷ்ணன், கன்னியாகுமரி பேரூராட்சி துணைத்தலைவர் திரு. தம்பிதங்கம், வேளாண் மற்றும் விற்பனை வணிக துறை செயலாளர் திரு. விஜீபிரசாத், பொறியாளர் ரமேஷ், கண்காணிப்பாளர்கள் (திருக்கோவில்கள்) திரு. ஜீவானந்தம், திரு. சிவராமசந்திரன், தோவாளை ஊராட்சித்தலைவர் திருமதி. தாணம்மாள், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. நாஞ்சில் முருகேசன், திரு. நாஞ்சில் சந்திரன், திரு. கே.யு.சி. மணி, திரு. ரெஜிஸ்ராஜ், திரு. கனகராஜ், திரு. என்.என். ஸ்ரீ ஐயப்பன், திரு. வின்ஸ்டன், திரு. எழிலன், திரு. நாகராஜன், திரு. மனோகரன், திரு. ஜெயசீலன், திரு. ராஜாராம், ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.